Aparajitha

தளிர்த் திறன் திட்டம்

# வெற்றியின் விதைகள்

ஜூலை
2017

23



பொருள் பக்கம்

| பொருள் | பக்கம் |
|---|---|
| வணக்கம்! | 2 |
| பதிவுகள் | 3 |
| சுவடுகள் | 4 |
| எதிரொலிகள் | 8 |

அபராஜிதா அறக்கட்டளை
5அ, வி.பி. இரத்தினசாமி சாலை
பீபிகுளம்
மதுரை 625 002
www.aparajitha.org
0452-4375252
info@aparajitha.org

செய்திமடல்
தனிச்சுற்றுக்கு மட்டும்

வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்

# வணக்கம்!

"கொடை கொடுத்தல்" பற்றி இலக்கியங்கள் தொடர்ந்து பேசுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை பொருட்கொடை பற்றியனவாகவே இருக்கின்றன. பொருள் அல்லாதவைகளான உணவு, வாய்ப்பு, உழைப்பு, நேரம், கல்வி ஆகியன போன்றவற்றைக் கொடையாகக் கொடுப்பதைப் பற்றி தளிர்த்திறன் திட்டத்தின் "கொடை கொடுத்துப் பழகுக" பாடம் உள்ளிட்ட மிகச்சிலவே பேசுகின்றன. இக்கொடைகளில் ஒன்றாகிய "கல்விக்கொடை"யை அரசு அலுவலர் ஒருவர், தன்னார்வலர்களைக்கொண்டு ஓர் இயக்கமாக மாற்றியிருக்கிறார். அக்கொடை முயற்சி பற்றியும் அதில் அபராஜிதாவின் பங்களிப்பைப் பற்றியும் பேசுகிறது இவ்விதழில் பதிவுகள் பகுதி.

கோடைக்கால விடுமுறையை இன்னொரு வகுப்பறை வாழ்க்கையாக மாற்றாமல் மகிழ்வில் திளைக்கச் செய்த "திறன்கொடை", விளையாட்டு வீரர்களுக்கு வழங்கிய "உடைக்கொடை", சமூகப்பணியாளர்களுக்கு வழங்கிய "பயிற்சிக்கொடை" ஆகியன பற்றி உங்களோடு பகிர்கிறது இவ்விதழின் சுவடுகள் பகுதி.

"கொடைகள்" பற்றிய செய்திகளைப் படியுங்கள்! தங்களது "எண்ணக்கொடை"யை பகிருங்கள். வாழ்க்கைத்திறன் கல்வியை எல்லோருக்கும் வழங்க இணைந்து செயல்படுவோம் வாருங்கள்!

தொடர்ந்து உங்களின் ஆதரவையும் ஆலோசனையையும் எதிர்நோக்கும்,

*அரிஅரவேலன்*
*மேலாளர்*



*தளிர்த் திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடக்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், பஞ்சாப், அரியானா ஆகிய ஏழு மாநிலங்களிலும் புதுச்சேரி ஒன்றியப் பரவிலும் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

# பதிவுகள்

## எண்ணிய எண்ணியாங்கு எய்துவர். . .

விருப்பமும் தெளிவும் உடையவர்கள் துணிந்து மேற்கொள்ளும் புதிய முயற்சிகள் எண்ணிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பர். அதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது மத்திய பிரதேசத்தில் இந்தூர் கோட்ட ஆணையர் திருமிகு சஞ்சய் துபே ஐ.ஏ.எஸ். மேற்கொண்டிருக்கும் "கல்விக்கொடைத் திட்டம்" (Vidyadaan Project).

மத்தியப் பிரதேசத்தில் 51 மாவட்டங்கள் உள்ளன; அவை 10 கோட்டங்களாக பகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கோட்டத்திற்குள்ளும் சில மாவட்டங்கள் இருக்கின்றன. அவ்வகையில் அலிராஜ்பூர், இந்தூர், காண்டுவா, கார்கோன், தார், பர்கான்பூர், பர்வானி, ஜாபுவா ஆகிய எட்டு மாவட்டங்களை உள்ளடக்கி இந்தூர் கோட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. 54 ஒன்றியங்களைக்கொண்ட இக்கோட்டத்தின் ஆணையராக திருமிகு சஞ்சய் துபே பொறுப்பு வகிக்கிறார். இவர் இக்கோட்டத்திலுள்ள ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் 5 பள்ளிகள் வீதம் 270 பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் உட்கட்டமைப்பையும் கற்பித்தல்-கற்றல் தரத்தையும் நடுவண் இடைநிலைக் கல்வி வாரிய (Central Board of Secondary Education) பள்ளிக்கு இணையாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

அதன் ஒரு பகுதியாக இப்பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் தொலைக்காட்சிப் பெட்டியும் குறுந்தகடு இயக்கியும் வழங்கப்பட்டு இருக்கின்றன. இந்தூரிலுள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் (Indian Institute of Management, Indore) பயிலும் ஆறு மாணவர்களின் துணையோடு கணிதம், அறிவியல், ஆங்கிலப் பாடங்கள் காணொளிகளாக உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி இந்தூரிலுள்ள 25 பள்ளிகளில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இது தவிர, இக்கோட்டத்திலுள்ள பல்வேறு பள்ளிகளில் 2228 தன்னார்வலர்கள் பாடங்களைக் கற்பிக்கப்படுகின்றர்.

வகுப்பறைக்கு அப்பாலுள்ள சமூகத்தில் மாணவர்கள் இணைந்தியங்கத் தேவையான வாழ்க்கைத்திறன்களை வழங்கும் நோக்கில் அபராஜிதா அறக்கட்டளையின் தளிர்த் திட்ட திட்டத்தின் இந்தி வடிவமான "டிம் டிம் தாரே" பாடங்களை இந்த 270 பள்ளிகளிலும் கற்பிக்கத் தேவையான ஏற்பாடுகளை கல்வித்துறை அலுவலர் திருமிகு ஆனந்த் சர்மாவின் வழியாக கோட்ட ஆணையர் மேற்கொண்டிருக்கிறார்.

அதன் முதற்படியாக, 2016 ஆகஸ்டு முதல் நாள் இந்தூரிலுள்ள 25 பள்ளிகளில் டிம் டிம் தாரே தொடங்கப்பட்டது. கற்பித்தல் பணிகளை ஆசிரியர்கள் மேற்கொண்டனர். அவர்களை துணை இயக்குநர் ஊக்குவித்து வழிநடத்தினர். கோட்ட ஆணையர் மாதந்தோறும் திட்டத்தின் வளர்ச்சியையும் மாணவர்களிடையே ஏற்படும் நடத்தைமாற்றங்களையும் மதிப்பீடு செய்தார். இக்கூட்டு முயற்சியின் விளைவாக கடந்த கல்வியாண்டின் முடிவில் 125 பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவாக்கப்பட்டு இருக்கிறது. எனவே, இக்கல்வியாண்டு நிறைவுறும்பொழுது அம்மண்டலத்திலுள்ள 270 முன்மாதிரிப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயலாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*- தி.அ.பத்மநாபன்*

# சுவடுகள்

*(2017 ஏப்ரல் முதல் சூன் வரையிலான நிகழ்ச்சிகள்)*

## வாழ்க்கைத்திறன் கல்வி கோடைக்கால முகாம்கள்



“ஒருவரை அவரின் அன்றாட வாழ்வின் தேவைகளையும் சவால்களையும் திறம்படக் கையாள தகுதிப்படுத்தும் ஏற்றிசைதல், உடன்பாட்டு நடத்தை ஆகியனவே வாழ்க்கைத் திறன்கள்” என்கிறது உலக நலவாழ்வு அமைப்பு. அத்திறன்களை விளையாட்டு, பாட்டு, நடிப்பு, செயல்பாடுகள், கைவினைகள், வண்ணங்களோடு விளையாடுதல் ஆகியவற்றின் வழியே குழந்தைகள் கற்றுக்கொள்வதற்காக கோடை முகாம்களை அபராஜிதா அறக்கட்டளை ஆண்டுதோறும் ஒருங்கிணைக்கிறது.



## தமிழ்நாடு

அவ்வகையில் இவ்வாண்டு மே 2 முதல் 6ஆம் நாள் வரை அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் லிமிடெட் பணியாளர்தம் குழந்தைகளுக்கு மதுரை ஒய்.எம்.சி.ஏ. பேச கேட்க இயலாதவர் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும் மே 15 முதல் 19ஆம் நாள் வரை மதுரை அன்னைநகர் குடியிருப்போர் நலச்சங்கத்தோடு இணைந்து அந்நகரின் குழந்தைகளுக்கு அவர்களின் குடியிருப்புப் பகுதியிலும் முகாம்கள் நடைபெற்றன.



"அணிச்செயற்பாடு" என்னும் கருத்தை குழந்தைகளின் மனதில் விதைப்பதே இம்முகாம்களின் நோக்கமாக இருந்தது. எனவே, அவர்கள் 5 அணிகளாக பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் அணியினரும் தத்தம் செயற்பாடுகளை தாமே மதிப்பிட்டு தமக்கு மதிப்பெண்கள் வழங்கினர்.



‘என்னை அறிக’, ‘சொல்லைக் கண்டுபிடி’, ‘தலைவரைக் கண்டுபிடி’, ‘உற்றுக்கவனி’, ‘அடையாளம் காண்க’, ‘நினைவுகூர்க’, ‘படத்தின் மீதம் எங்கே?’ ‘காலம் கருதுக’ ஆகிய விளையாட்டுகளையும் ‘கிறுக்கல்’, ‘வண்ண விளையாட்டு’, ‘புதிய வண்ணங்களை உருவாக்குதல்’, ‘ஐந்து வகையான தொப்பிகள் செய்தல்’, ‘காகித முகமூடி செய்தல்’, ‘அச்சுப்பதித்தல்’ ஆகிய செயற்பாடுகளையும் அணியாக மேற்கொண்டதன் வழியாக தம்மையறிதல், ஒத்துணர்தல், பிறருடன் பழகுதல், கருத்துப்பரிமாற்றம், ஆக்கச் சிந்தனை, ஆய்வுச் சிந்தனை, முடிவெடுத்தல், சிக்கலைத் தீர்த்தல், உணர்வழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல், மனவழுத்தத்திற்கு ஈடுகொடுத்தல் ஆகிய வாழ்க்கைத் திறன்களைப் பெற்றனர்.



### குஜராத்

ஏப்ரல் 19ஆம் நாள் முதல் 26ஆம் நாள் வரை அகமதாபாத் நகரிலுள்ள 6 பள்ளிகளிலும் மே 1, 2, 3ஆம் நாள்களில் வடோதரா நகரிலுள்ள 2 பள்ளிகளிலும் ஒருநாள் வாழ்க்கைத்திறன் கல்வி முகாம்கள் நடைபெற்றன. அவற்றில் கலந்துகொண்ட குழந்தைகளுக்கு தளிர்த்திறன் திட்டத்தின் குஜராத்தி வடிவமான டிம் டிம் தாரா திரைப்பாடங்கள் திரையிடப்பட்டன.



*- மு. செந்தில்குமார்*

## விளையாட்டுப் பயிற்சி முகாமினருக்கு T சட்டைகள்




மதுரை டி.வி.சுந்தரம் மேல்நிலைப்பள்ளியில் கோடைகால விளையாட்டுப் பயிற்சி முகாம் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டு நடைபெற்ற முகாமில் இருபால் மாணவர்கள் 120பேர் கலந்துகொண்டனர். 2017 மே 31ஆம் நாள் நடைபெற்ற முகாம் நிறைவுநாள் விழாவில் கலந்துகொண்ட மேலாளர்கள் திருமிகு து.முருகன், க.அரிஅரவேலன் ஆகிய இருவரும் முகாமில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் அபராஜிதாவின் சார்பில் T-சட்டைகள் வழங்கினர்.

## அல்லரசுப் பணியாளர்களுக்கு வாழ்க்கைத்திறன் கல்வி

இந்தியா எழுத்தறிவுத் திட்டம் என்னும் அமைப்பு "100% எழுத்தறிவுபெற்ற இந்தியா" என்னும் இலக்கை நோக்கிச் செயற்படும் அல்லரசு அமைப்பாகும். இந்நிறுவனம் தமிழகம் உள்ளிட்ட 8 மாநிலங்களில் 2143 கிராமங்களில் பிற அல்லரசு அமைப்புகளோடு இணைந்து செயற்படுகிறது. அவற்றுள் தமிழ்நாடு, தெலுங்கானா மாநிலங்களில் பணியாற்றும் 7 அல்லரசு அமைப்பைச் சேர்ந்த பணியாளர்களுக்கான பயிலரங்கம் 2017 ஏப்ரல் 10, 11, 12ஆம் நாள்களில் சென்னையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற 32 பணியாளர்களுக்கு அபராஜிதா அறக்கட்டளையின் முதுநிலை செயலாக்குநர் திருமிகு மு. செந்தில்குமார் "வாழ்க்கைத்திறன் கல்வி" பற்றிய கலந்துரையாடலை வழிநடத்தி, தளிர்த்திறன் திட்டத்தை அறிமுகம் செய்தார்.

# எதிரொலிகள்

இது மிகவும் நல்ல முயற்சி. நற்பணியைத் தொடர்க!

*- பிராச்சி காந்தேபர்கர்*
*வளரிளம் பருவத்தினர் நலவாழ்வுத் திட்ட இயக்குநர், சங்கத், கோவா.*

உங்களது பணியைக் கண்டு பெருமிதம் கொள்கிறேன். தொடர்க!

*- முனைவர் வாசுதேவன் ராஜாராம்*
*காம்காஸ்ட். சென்னை,*

தளிர்த்திறன் திட்டத்தின் மூலம் மாணவர்கள் அனைவருக்கும் நற்பயன் கிட்டுமென்பது வெள்ளிடை மலை. நல்வாழ்த்துகள்!

*- தி. ஆறுமுகம்*
*பெங்களூரு.*

பாராட்டுகள்! ஊக்கமூட்டும் செய்திமடலைப் பகிர்ந்தமைக்கு நன்றி!

*- பிம்லா*
*செயலாளர் & இயக்குநர், ஏக்தா - பெண்கள் வளநடுவம், மதுரை,*

எல்லா இடங்களிலும் வெற்றியின் விதைகளைத் தூவுவோம்; அவ்விதைகள் செயல்வடிவ விளைவுகளை ஏற்படுத்தும் என நம்புவோம்.

*- பி. ப்பி. பெரைரா*
*மென்திறன் பயிற்றுநர், மதுரை.*

மாணவர்களிடமும் அவர்களுக்கு இணையாக ஆசிரியர்களிடமும் தளிர்த் திறன் திட்டத்தால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளைக் காண்பது சிறப்பாக இருக்கிறது.

*- வ. ஸ்ரீனிவாசன்*
*நிறுவுநர், ஆல்டேர் மனிதவள மேலாண்மை & திட்டங்கள், சோழவந்தான்.*

சுருக்கமும் தெளிவுங்கொண்ட முழுமையான அறிக்கை

*- கி. துர்க்கா*
*அறங்காவலர், அபராஜிதா அறக்கட்டளை, மதுரை.*

அருமையான பணி. பள்ளி முதல்வர்களின் ஆசிரியர்களின் பின்னூட்டங்களைப் படிக்கையில் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

*- மருத்துவர் ஜி. ஹரிப்ரியா அரவிந்த்*
*அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை.*

தளிர்த்திறன் திட்டம் பல்வேறு மாநிலங்களில் திறம்பட செயலாக்கப்பட்டிருப்பதையும் ஆசிரியர்கள் பலரின் பின்னூட்டங்கங்களையும் படிக்கையில் மிகவும் பெருமிதமாக இருக்கிறது. இத்திட்டத்தை வெற்றிகரமாக செயலாக்கியதற்காக இராஜஸ்தான் மாநில தலைமையாசிரியர் தினேஷ்வியாஸிற்கு விருது வழங்கப்பட்டு இருப்பது கிரிடத்தில் வைக்கபட்ட வைரமாகும்.

*- சி. வா. சிதம்பரம்*
*வணிக மேலாளர், அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் (பி) லிமிடெட், மதுரை.*